# சர்வதேச மன்னிப்புச்சபை தூதுக்குழு வட கிழக்கு பகுதிக்குச் செல்லக் கட்டுப்பாடு

அடுத்த மாதம் இலங்கை வரவுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்வது கட்டுப்படுத்தப்படும் இவ்வாறு ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு மன்னிப்புச்சபை தூதுக்குழு எவ்வித கட்டுப்பாடும் இன்றி செல்ல முடியும். ஆனால் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வடக்கு கிழக்குப் பகுதிக்கு செல்வதை அரசதான் முடிவு செய்யும் என பிரட்மன் மேலும் தெரிவித்தார். மூன்று பேரடங்கிய சர்வதேச மன்னிப்புச்சபை அடுத்தமாத முற்பகுதியில் இலங்கை வரவுள்ளது. இக்குழு முதலில் கிழக்கில் மட்டக்களப்பு செல்லவே அரசிடம் அனுமதி கேட்டுள்ளதாம். இது குறித்து கருத்து தெரிவித்த பிரட்மன் வடகிழக்குப் பகுதியில் அப்போது காணப்படும் நிலைமையைப் பொறுத்தே இவ்வனுமதி வழங்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.


பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 4 : 50

# முரசொலி

முரசு 05 ஒலி 178 பிரசோற்பத்தி வைகாசி 11 (25-05-1991) சனி


# ராஜீவின் பூதவுடல் நேற்று தீயுடன் சங்கமமானது

## மீண்டும் சோனியா தெரிவு

திருமதி சோனியா காந்தியை மீண்டும் காங்கிரஸ் தலைவராக அக்கட்சியின் செயற்குழு தெரிவு செய்துள்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## பாதுகாப்பு மத்தியில் இறுதிக் கிரியைகள்

இந்தியாவின் 7ஆவது பிரதமரும் இந்திரா காங்கிரஸின் தலைவருமான ராஜீவ் காந்தியின் பூதவுடல் நேற்று மாலை யமுனை நதிக்கரையோரத்தில் அக்கினியில் சங்கமமானது.

நேற்று மாலை 5 25 மணியளவில் சக்தி ஸ்தலில் அமைக்கப்பட்ட சந்தனக் கட்டைகளிலான ராஜீவின் சிதைக்கு அவரது மகன் ராகுல் காந்தி (18) தீமூட்டினார்.

சிதைக்கு அருகில் வெள்ளை சேலையுடன் சோனியா காந்தி, மகள் பிரியங்கா காந்தி ஆகியோர் சோகமாக நின்றிருந்தனர்.

**பீரங்கி வண்டியில் ராஜீவின் பேழை**

முன்னதாக நேற்று நண்பகல் அளவில் ராஜீவின் பூதவுடல் தீமூர்த்தி பவனில் இருந்து இராணுவ பீரங்கி வண்டியில் ஊர்வலமாக சக்தி ஸ்தல் நோக்கி புறப்பட்டது.

பீரங்கி வண்டியில் வைக்கப்பட்டிருந்த ராஜீவ் காந்தியின் பேழை இந்திய தேசியக் கொடியினால் மூடப்பட்டிருந்தது.

**படையினர், உறவினர் அணிவகுப்பு**

பீரங்கி வண்டிக்கு முன்பாக முப்படையினர் சோக இசை முழங்கி அணிவகுத்து சென்றனர். வண்டியின் அருகில்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்நாட்டில் வன்முறை பலர் தற்கொலை செய்ய முயற்சி

தமிழ் நாட்டில் நேற்று நடைபெற்ற வன்முறைகளில் எட்டுப்பேர் பலியாகியுள்ளனர். இவர்களில் இருவர் தீக்குளித்து மரணமாகினர்.

தமிழ் நாட்டில் பலர் நேற்று தற்கொலை முயற்சிகளில்

—04ஆம் பக்கம் பார்க்க

## கொலைக்கு காரணமான பெண் இந்துப்பத்திரிகையில் புகைப்படம்

ராஜீவ் காந்தி கொல்லப்படக் காரணமாக இருந்த குண்டை பூக்கூடைக்குள் வைத்து ஸ்ரீபெரம்புதூருக்கு கொண்டு வந்ததாக கூறப்படும் இனந்தெரியாத பெண்ணின் புகைப்படத்தை இந்து பத்திரிகை வெளியிட்டுள்ளது.

ராஜீவ் காந்திக்கு வரிசையாக நின்று மக்கள் மலர்ச்செண்டுகள் வழங்கும் போது இந்தப் பெண்ணும் அவ்வரிசையில் நிற்பதை படம் காட்டியுள்ளது.

குண்டு வெடிப்பினால் மேற்படி பெண் அடையாளம் தெரியாது சிதைந்துபோனமை தெரிந்ததே.

## தேர்தலை உடன் நடாத்துமாறு காங்கிரஸ் கோரிக்கை நிராகரிப்பு

பின்தள்ளி வைக்கப்பட்ட இந்திய பொதுத்தேர்தல்கள் திட்டமிட்டபடி அடுத்த மாதம் 12ஆம், 15ஆம் திகதிகளிலேயே நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இந்திரா காங்கிரஸ் தவிர்ந்த ஏனைய அரசியல் கட்சிகள் இத்திகதிகளுக்கு முன்பாக தேர்தல்களை நடாத்த வேண்டாம் என கோரியுள்ளன எனவும் காங்கிரஸ் முன்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## ஈழத்தமிழரை வெளியேற்றுமாறு ஜெயலலிதா கோரிக்கை

தமிழகத்தில் தங்கியுள்ள அனைத்து இலங்கைத் தமிழரையும் வெளியேற்றவேண்டுமென அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமது கோரிக்கையை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறும் அவர் கேட்டுள்ளார். தமிழகத்தில் உள்ள இலங்கைத் தமிழரை உடனடியாக வெளியேற்றுமாறு வாழப்பாடி ராமமூர்த்தியும் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருந்தமை தெரிந்ததே.

## மணலாற்றில் தொடர்ந்து ஷெல், பொம்மர் தாக்குதல்

மணலாறு மாவட்டத்தில் உள்ள முகாம்களில் இருந்து தொடர்ந்து ஷெல் தாக்குதல் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினமிரவு மணலாறு, தென்னைமரவாடி இராணுவ முகாமில் இருந்து கொக்கிளாய் முகத்துவாரம் நோக்கி ஆறு தடவை ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது.

நேற்று அதிகாலை ஆண்டான்குளம் முகாமில் இருந்து கொக்கிளாய் 15ஆம் கட்டை நோக்கி ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதைத்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மூதூரின் நான்கு கிராமங்களில் தமிழர்களை வெளியேற உத்தரவு

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பகுதியில் நான்கு கிராமங்களில் இருந்து சுமார் நாலாயிரம் மக்களை வெளியேறுமாறு இராணுவத்தினர் உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலக்கந்தை, கவித்தீவு, பள்ளிக்குடியிருப்பு, பெரு

— 04 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு பயணம் தடைப்பட்டது

நேற்று முன்தினம் நண்பகல் முதல் வவுனியா நகரிலும் மற்றும் சில பகுதிகளிலும் படையினரால் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்

—04 ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவில் கடற்படை தாக்கு மாணவி உட்பட மூவர் காயம்

கடந்த திங்கட்கிழமை இரவு நெடுந்தீவு கோரி முனைப்பகுதியில் இருந்த கடற்படையினர் பீரங்கிப்படகிலிருந்து குடிமனைகளை நோக்கி சரமாரியாகத் தாக்குதல்களை நடாத்தினர்.

இதனால் இப்பகுதி மக்கள் பாடசாலைகளிலும், கோவில்களிலும் தஞ்சமடைந்தனர்.

மூவர் காயமடைந்து நெடுந்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## நிபுணர்கள் அறிவிப்பு

# ஆர். டி. எக்ஸ். குண்டு ராஜீவின் உயிரைப் பறித்தது!

ராஜீவ் காந்தியின் உயிரைப் பறித்த வெடிகுண்டு குறித்து மேலும் சில விபரங்களை இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவின் வெடிகுண்டு நிபுணர்கள் அறிவித்துள்ளனர்.

இவ்வெடிகுண்டு பிளாஸ்டிக்கிலானது எனவும். இதை அந்த இனந்தெரியாத பெண் தனது இடுப்பில் கட்டி வந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதை இயக்கும் விசையையும் (Trigger) அவர் இடுப்பிலேயே வைத்திருந்து சரியான சமயத்தில் தட்டிவிட்டார் எனக் கூறப்படுகிறது. இப்பிளாஸ்டிக்கிலான குண்டு ஆர். டி. எக்ஸ் என அழைக்கப்படுவதாகவும் இது சர்வதேச ரீதியில் பாவனையில் உள்ளதாகவும் வெடிகுண்டு நிபுணர்கள் தெரிவித்தனர்.

## காங்கிரஸாரே சந்தேகிக்கின்றனர் அதிகாரிகள் அல்ல- நெடுமாறன்

ராஜீவ் காந்தியின் கொலையை விடுதலைப்புலிகளுடன் தொடர்புபடுத்துவது குறித்து தமிழக காந்தி காமராஜ் கட்சி தலைவர் ப. நெடுமாறன் கண்டித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு இந்திய அரசியல் குறித்து எவ்வித நாட்டமுமில்லை புலிகளை சந்தேகிப்பவர்கள் காங்கிரஸ்காரரே தவிர புலன் விசாரணை செய்யும் அதிகாரிகளல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

★ ஆணைக்குழு முன் எம். எஸ். எப். பிரதிநிதி சாட்சியம்

# ஸ்ரீலங்காராணுவத்தால்பலதடவை எமக்கு தொந்தரவு ஏற்பட்டுள்ளது

வடக்கு கிழக்குப்பகுதிகளில் எம். எஸ். எப். உறுப்பினர்களுக்கு அரசாங்க படையினரால் பலதடவைகள் தொந்தரவுகள் ஏற்பட்டுள்ளதாக மடுச் சம்பவம் குறித்து விசாரணை செய்யும் தனிநபர் ஆணைக்குழு முன்சாட்சியமளித்த 'மெடிசின்ஸ்சான்ஸ்ஃபுரொண்டியேர்ஸ்' நிறுவன கொழும்பு தலைமையலுவலக நிருவாக அதிகாரி கிறிஸ்டன் நியூஸ் தெரிவித்தார்.

அவரது சாட்சியத்தின் முக்கிய பகுதிகளை இங்கு முரசொலி வாசகர்களுக்காகத் தொகுத்துத் தருகின்றோம்.

### பலாலியில் எம்மைப் பணயம் வைத்தனர்

எம். எஸ். எப். பிரதிநிதிகள் கடந்த வருடம் ஜூலை மாதம் 6ஆம் திகதி கொழும்பிலிருந்து விமானமூலம் பலாலிக்குச் சென்றனர்.

அச்சமயம் எம். எஸ். எப். பிரதிநிதிகளின் வருகையைப் பயன்படுத்தி பலாலி இராணுவ முகாம் இப்பாய்கள் தங்கள் நிலைகளைப் பலன் படுத்திக்கொண்டனர். எம். எஸ். எப். டாக்டர்களையும் இணைப்பதிகாரியையும் ஒருகரும் இல்லாத இடத்தில் 20நிமிடம் கீழ்படுக்கவைத்துவிட்டு மணல் மூடைகளை அடுக்கிக்கொண்டிருந்தனர். எம். எஸ். எப். வாகனம் அங்கிருந்து புறப்பட்டதும் அவர்கள் தாக்குதலைத் தொடங்கினர். இதனால் எமது பிரதிநிதிகள் காயப்படவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

### விமானப் பயணத்தை நிறுத்தினோம்

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து நாம் விமானத்தில் செல்வதை நிறுத்திக்கொண்டோம்.

### பருத்தித்துறையில் பங்கருக்குள்

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி பருத்தித்துறை வைத்தியசாலைக்கு அருகே குண்டு போடப்பட்டது அந்நேரம் அங்கு கடமையிலிருந்த எம். எஸ். எப். டாக்டர்கள் ஒன்றரைமணி நேரம் பங்கருக்குள் இருந்தனர்.

### வவுனியாவில் 5மணி நேர சோதனை

கடந்த நவம்பர் 16ஆம் திகதி கொழும்பிலிருந்து மருந்துகளை ஏற்றிச்சென்ற எம் எஸ் எப். வாகனம் வவுனியாஇராணுவசோதனை நிலையத்தில் ஐந்துமணிநேரம் தடுத்து வைக்கப்பட்டது அதுடன் அனைத்து பொருள்களும் கவனமாகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

### தொடர்புகொள்ள அனுமதியில்லை

அப்போது கொழும்புக்குக் கூடதொடர்புகொள்ளஎமக்கு இராணுவம் அனுமதிக்கவில்லை

### 48 மணிநேரம் சாரதி தடுப்பு

எம்முடன் அச்சமயம் வந்த இரண்டு சாரதிகளில் ஒருவர் காரணமின்றி 48 மணிநேரம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டார்.

### அம்புலன்ஸ் மீதும் ஹெலி தாக்கியது

இவ்வாண்டு பெப்ரவரி 2ஆம் திகதி மடுவிலிருந்து மன்னார் வைத்தியசாலைக்கு 12 நோயாளிகளுடன் சென்ற அம்புலன்ஸ் ஹெலிகொப்டரின் தாக்குதலுக்கு உள்ளானது.

### வெருகலில் 3 தடவை சூடு

பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி திருமலையிலிருந்து வெருகலுக்குச் சென்ற எம் எஸ் எப் வாகனம் மீது வெருகல் இராணுவ முகாமிலிருந்து மூன்று தடவை துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

### பல தடவை ஹெலித் தாக்குதல்

ஏப்ரல் 29 ஆம் திகதி கொக்கட்டிச்சோலையிலிருந்து களுவாஞ்சிக்குடி... காந்தாமலை நோக்கிச்சென்ற எம். எஸ் எப். வாகனம் மீது ஹெலியிலிருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

### பாதுகாப்பு அமைச்சு அனுமதி உண்டு

எம் எஸ். எப். பிரதிநிதிகள் வடக்கு - கிழக்கில் கடமை புரிய பாதுகாப்பு அமைச்சு அனுமதிப்பத்திரம் வழங்கியுள்ளது. எனினும் எமது நடமாட்டம் குறித்து அறிவிக்கவே நாம் கூட்டுப்படைத் தலைமையலுவலகத்தில் முன் அனுமதி கேட்பதுண்டு. ஆனால் கூட்டுப்படை தலைமையகம் ஊரடங்கு அமுலாக்கம் பயங்கரவாத முறியடிப்பு நடவடிக்கை குறித்து எமக்கு அறிவிப்பதில்லை.

# ராஜீவ்கட்அவுட்சரிந்துஒருவர் பலி மேலும்இருவர் தீக்குளித்து மரணம்

தெருவோரத்தில் அமைக்கப்பட்டிருந்த ராஜீவ் காந்தியின் கட் அவுட் சரிந்து விழுந்ததில் ஒருவர் பலியானார். இச்சம்பவம் நேற்று முன்தினம் சென்னையில் நிகழ்ந்துள்ளது.

இதேவேளை ராஜீவின் திடீர் மரணத்துயரைத் தாங்கமுடியாத இருவர் தமக்குத்தாமே தீ மூட்டித் தற்கொலை செய்துகொண்டனர். இச்சம்பவமும் தமிழகத்தில் தான் நடந்துள்ளது.

இது இவ்வாறிருக்க ராஜீவ் வுடன் குண்டு வெடிப்பில் மேலும் ஏழு காங்கிரஸ் தொண்டர்களும் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் முன்னாள் தமிழகச் சட்டப் பேரவை உறுப்பினர் முனுசாமியும் ஒருவராவார்.


## வாடிக்கையாளரின் நன்மை கருதி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது

இதுவரை காலமும் புங்கன்குளம் சந்தியில் இயங்கிவந்த

## ஸ்ரீ பாபா ரெக்ஸ்ரைல்ஸ்

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களின் நன்மை கருதி

மாம்பழம் சந்திக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது

என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்

★ றெடிமேட் உடுப்புக்கள்

★ பான்ஸி பொருள்கள்

★ சிறுவர் சிறுமியருக்கேற்ற தைக்கப்பட்ட ஆடைகள்

அனைத்தையும் பெற்றுக்கொள்ள சிறந்த இடம்

## ஸ்ரீ பாபா ரெக்ஸ்ரைல்ஸ்

03108


# நட்புநாடு என்ற நிலையிலிருந்து மாலைதீவு விலகிச் செல்கிறது

இலங்கையின் மிக நெருங்கிய நட்புநாடு என்ற நிலையிலிருந்து மாலைதீவு தற்பொழுது விலகிச் செல்வதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

★ அண்மையில் இலங்கையைச் சேர்ந்த 170 மீனவர்களையும், 17 நவீன மீன்பிடிப் படகுகளையும் மாலைதீவு அரசு கைப்பற்றித் தடுத்து வைத்திருந்தமை.

★ மாலைதீவு அரசுக்கெதிராக இலங்கையில் சதித் திட்டங்கள் தீட்டப்பட்டமை,

★ மாலை அரசுக்கெதிரானவர்கள் கொழும்பில் நடமாட இடம் கொடுத்தமை ஆகிய காரணங்களினாலேயே இந்த விரிசல் நிலை தோன்றியுள்ளதாம்.

இதன் எதிரொலியாகவே இலங்கையில் நடைபெறவிருந்த சார்க் வருடாந்த மகாநாட்டை மாலைதீவு தட்டிக்கழித்ததாகவும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்

# எழுதுநர் அதிசிறப்புப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு நியமனம்

1989-ல் நடைபெற்றபொது எழுதுநர் சேவை அதிசிறப்புப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளவர்களுக்கு நியமனம் வழங்க பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு சித்தியடைந்தவர்கள் எந்த மாகாணசபையின் கீழ் வேலை செய்ய விரும்புகிறார்கள் என்பதை உடனடியாகத் தமக்கு அறிவிக்குமாறு பொது நிர்வாக அமைச்சின் இணைந்த சேவைகள் பணிப்பாளர் ஏ. குணவர்த்தனா கேட்டுள்ளார்.

# திருமலையில் முஸ்லிம்களை வெளியேற்றி சிங்களவரைக் குடியேற்ற முயற்சி

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள உப்புவெளியிலிருந்து 58 முஸ்லிம்களை வெளியேற்றிவிட்டு சிங்களவர்களைக் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

இந்த விடயம் குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

1983 ஆம் ஆண்டு இவர்கள் வெளியேற்றப்பட்டதாகவும், 1988 இல் இவர்கள் இங்கு குடியேறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

13 6 90 இல் மீண்டும் இவர்கள் இங்கிருந்து வெளியேற்றப்பட்டதாகவும் இவர்களின் வீடுகள் எரிக்கப்பட்டதாகவும், அங்கு செல்லாதவாறு தடுக்கப்படுவதாகவும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன.

# வடக்குக்கிழக்கிற்குஇத்தாலிய அரசு வழங்கும் நிதியில் பிறபகுதி வைத்தியசாலைகளைத்திருத்த அரசு முயற்சி

இத்தாலிய அரசு வடக்குக் கிழக்குப் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளைப் புனரமைப்புச்செய்வதற்கு வழங்க முன்வந்துள்ள நிதியைப் பயன்படுத்திச் சுகாதார அமைச்சு வடக்குக் கிழக்கு எல்லைக்கு வெளியே சிங்களப் பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளைப் புனரமைக்க முயல்வதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு வடக்குக் கிழக்கில் புனரமைக்கப்படவேண்டிய வைத்தியசாலைகளின் பட்டியலைத் தருமாறு இத்தாலிய அரசு இலங்கை அரசிடம் கேட்டிருந்தது.

இதற்கமைய திருத்த வேலைகள் செய்யப்படவேண்டிய வைத்தியசாலைகளின் பட்டியல் ஒன்றைச் சுகாதார அமைச்சு இத்தாலிய அரசிடம் சமர்ப்பித்துள்ளது.

இப்பட்டியலில் வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கு வெளியேயுள்ள ஹிங்குராகொட, மதவாச்சி, ஹொரவப்பொத்தான, பதவிய, மெதிரிகிரிய, பொலன்நறுவ ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மன்னார் வைத்தியசாலை இப்பட்டியலில் இடம்பெறவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (16)

## சனசமூக சமாச போட்டிகள்

யாழ் மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் விளையாட்டுப் போட்டிகள் தொடரில் பாஷையூர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற 'ஓவர் கேம்' முறையிலான கரபந்தாட்டப் போட்டியில் பாஷையூர் மூ. ச. ச. நிலைய அணியும் குருநகர் சனசமூக நிலைய அணியும் வெற்றி பெற்றுள்ளன

முதற்போட்டியில் பாஷையூர் நிலைய அணி அதனை எதிர்த்து ஆடிய பாரதி மன்ற அணியை 15: 3, 15: 7 புள்ளிகள் அடிப்படையில் தோற்கடித்தது

அதனைத் தொடர்ந்து நடந்த இன்னொரு ஆட்டத்தில் குருநகர் ச. ச. நிலைய அணி பாரதி திருநகர் ச. ச. நிலைய அணி 15: 4, 15:3 புள்ளிகள் கணக்கில் வெற்றியீட்டி வென்றது.


## பரதநாட்டியம்

நீராவியடி-வண்-வட கிழக்கு ச.ச.நிலைய நிதி உதவிக்காக

நாளை 26.05.1991 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3.00 மணிக்கு

யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில்

❀ கதகளி பரதநாட்டியம்

புலவர். தட்சணாமூர்த்தியின்

❀ சங்கிலியன் (சரித்திர நாடகம்)



சங்கிலியனாக இலங்கைவேந்தன் தோன்றும் காட்சி

**டிக்கட் விபரம்:-100/-,50/-,25/-,10-**

அன்பளிப்பு:-

கணேசன் ஸ்ரோர்ஸ் 13, சந்தை கட்டிடம், திருநெல்வேலி.

நாகம் இன்டஸ்ட்ரீஸ், கல்வியங்காடு.

01513

## மகஸின் சிறையில் 350 தமிழ் இளைஞர்கள்!

## வெளித் தொடர்பு இன்றி 4 சுவர்களுக்குள் அவலம்

வடக்கு கிழக்கைச் சேர்ந்த 350க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் பல மாதங்களாக விடுதலையோ அல்லது வழக்குத்தாக்கலோ இன்றி கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் கிழக்கு மாகாணத்தில் சம்மாந்துறை, அக்கரைப்பற்று, தங்கவேலாயுதபுரம், காவரதிவு, தம்பிலுவில், அம்பாறை மட்டக்களப்புப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

கொழும்பு, வவுனியா மற்றும் வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்ற பகுதிகளில் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பலரும் மகஸின் சிறைச்சாலையில் அரசியல் கைதிகளாக அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

வழக்குத்தாக்கலோ அல்லது விடுதலைக்கான அறிகுறிகள் எதுவுமோ அற்ற நிலையிலும் உறவினர்களுடனோ அல்லது வெளியிடங்களுடனோ எதுவித தொடர்பும் அற்றவர்களாக இந்த இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## 'காபரே'யை ரசித்த அரசியல்வாதிகள்; படத்துடன் புட்டுவைக்கிறது 'ராவய'

'ராவய' என்னும் சிங்கள வார இதழ் இன்று தென் இலங்கையில் பரபரப்புக்குரிய ஒரு பத்திரிகையாக மாறியுள்ளது.

அண்மையில் அரசியல்வாதிகள் சிலர் ஹோட்டல் ஒன்றில் காபரே நடனமொன்றை மிகவும் ஆர்வமாக ரசிக்கும் புகைப்படமொன்றைப் பிரசுரித்து இப்பத்திரிகை மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பத்திரிகை ஈழத் தமிழர் போராட்டத்தை ஆதரிக்கும் கட்டுரைகளை வெளியிட்டதன் மூலம் ஏற்கனவே அங்கு பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

## கரும்புலிகளால் சேதமாக்கப்பட்ட 'அபீத்தா' பாதுகாப்புடன் திருமலைத் தளத்தில்

வல்வைக் கடலில் வைத்து கடற்கரும்புலிகளினால் சேதமாக்கப்பட்டதைப் ஸ்ரீலங்கா கடற்படையினரிடம் உள்ள கப்பல்களில் மிகப் பெரியது என்பதை இலங்கை அரசாங்கம் தற்பொழுது ஒப்புக்கொண்டுள்ளது.

'எஸ். எல். என். எஸ். அபீத்தா' என்னும் பெயர் கொண்ட இக்கப்பல் ஸ்ரீலங்கா கடற்படையின் ஆணைபிறப்பிக்கும் கப்பலாகும்.

இந்த வகையிலான ஆணை பிறப்பிக்கும் இன்னும் இரு கப்பல்கள் மட்டுமே ஸ்ரீலங்கா கடற்படையிடம் தற்போது எஞ்சியுள்ளன.

கடற் கரும்புலிகளால் தாக்கப்பட்டபின் 'எஸ். எல். என். அபீத்தா' பலத்த சேதமுற்ற நிலையில் தற்பொழுது திருகோணமலை கடற்படைத்தளத்தில் பாதுகாப்புடன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கரையிலிருந்து பல மைல்கள் தூரம் கடலில் நிறுத்தப்பட்டிருந்த இக்கப்பலில் இரு கரும்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பாரிய சேதமடைந்ததுடன் கடற்படை வீரர் பலர் படுகாயமடைந்ததும் தெரிந்ததே.

## ராஜீவின் காலை அந்த இளம்பெண் குனிந்து தொட்டதும் குண்டு வெடித்தது

ராஜீவின் கொலையுடன் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் அந்த இளம் பெண் பற்றிய மேலும் சில தகவல்கள் கிடைத்துள்ளன.

அடையாளம் காணப்படாத இந்த இளம்பெண்ணின் சடலம் காஞ்சிபுரம் வைத்தியசாலையில் தற்பொழுது வைக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் ராஜீவுக்கு மாலை அணிவிக்க வந்தவர்கள் அனைவரும் வழமையான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கமைய 'டிக்ரெக்டர்' எனும் கருவி பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்கள்.

ஆனால் குறித்த இளம் பெண்மணி மட்டும் அப்பரிசோதனைக்கு உள்ளாகியிருக்கவில்லை. ராஜீவ் மாலைகளை ஏற்றுக் கொண்டு மேடையை அண்மி வந்து கொண்டிருந்த தருணம் பார்த்து, இந்த இளம்பெண் எங்கிருந்தோ அவசர அவசரமாக மல்லிகைப் பூக்கூடையுடன் திடீரென வந்ததால் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் காந்தக் கருவிப் பரிசோதனை செய்து அவளைத் தாமதிக்க விரும்பாமல் நேரே ராஜீவை நோக்கிச் செல்ல அனுமதித்திருந்ததாகத் தற்பொழுது தகவல் வெளியாகியுள்ளது.

இவருக்கு முன்னே மாலை அணிவிப்பவர் வரிசையில் காத்திருந்த பொழுதிலும் இப்பெண்மணி அவர்களைப் பொருட்படுத்தாது திடீரென எல்லோரையும் முந்திக் கொண்டு ராஜீவுக்கே சென்று ராஜீவிடம் பூக்கூடையைக் கையளித்து விட்டு திடீரென கீழே குனிந்து அவரது பாதங்களைத் தொட்டு வணங்குவதுபோல் பாசாங்கு செய்த போது பெண்ணின் இடுப்பில் பொருத்தப்பட்டிருந்த குண்டு வெடித்தது.

## 'மயில்' வெளியீட்டு விழா

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் சார்பில் கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரையின் 'மயில்' நாடக வெளியீட்டு விழா 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் இடம்பெறவுள்ளது.

## இலங்கையில் பாம்புக்கடிக்கு தினமும் மூவர் பலியாகின்றனர்

இலங்கையில் தினசரி மூவர் விஷப்பாம்புக் கடிக்கு பலியாகின்றனர். விஷப் பாம்புக் கடியினால் அதிக எண்ணிக்கையானோர் மரணமாகும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

பாம்புக்கடி விஷம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று அண்மையில் கொழும்பில் உள்ள சுகாதாரக்கல்விப்பணியகத்தில் நடைபெற்ற பொழுது இந்த விபரம் தெரிவிக்கப்பட்டது.

பாம்புக் கடிக்கு ஆளாகும் ஒருவருக்கு சிகிச்சை அளிப்பதற்காக அரசாங்க ஆஸ்பத்திரிகளில் அன்டி மருந்துகளை எந்நேரமும் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று இக்கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது. (16)

## கெமுனுபடைப்பிரிவு உயர்அதிகாரி வடக்கில் பலியானதாக அறிவிப்பு

ஸ்ரீலங்கா இராணுவத்தின் முதலாவது கெமுனு வோச் படைப்பிரிவைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் மார்ச் மாதம் 30 ஆம் திகதி வடக்கில் கொல்லப்பட்டதாகக் கொழும்பு பத்திரிகை ஒன்று தற்பொழுது செய்தி வெளியிட்டுள்ளது.

கொல்லப்பட்டவர் பெயர் மேஜர் றஞ்சித் பெர்னாண்டோ எனவும் இவரது சடலம் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி பலாலியில் அடக்கம் செய்யப்பட்டதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

## ஓய்வூதியம்பெறுவோர் புகையிரத ஆணைச்சீட்டுகளை உதவி அரச அலுவலகங்களில் பெற புதிய ஏற்பாடு

ஓய்வூதியம் பெறுவோருக்கு புகையிரத ஆணைச்சீட்டுகள் அவர்களது பகுதி உதவி அரச அதிபர் அலுவலகங்களில் வைத்தே வழங்கப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை ஓய்வூதியப் பணிப்பாளர் ஆர். டபிள்யூ. பியசேன மேற்கொண்டுள்ளார்.

ஓய்வூதியம் பெறுவோர் ரயில்வே பயணத்தை மேற்கொள்ள இதுவரை மாவட்ட செயலகங்களிலே ரயில்வே வாரண்டுகளைப் பெற்றுக் கொள்வது நடைமுறையாக இருந்து வருகிறது.

இந்த நடைமுறையால் ஓய்வூதியம் பெறுவோர் பல தரப்பட்ட சிரமங்களை எதிர் நோக்க வேண்டியிருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டதை யடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது 25 மாவட்டக் கச்சேரிகளில் ரயில்வே வாரண்டுகள் வழங்கப்படுகின்றன. இவைகள் நடைமுறைக்கு வரவுள்ள புதிய முறையின்படி 279 உதவி அரச அதிபர் அலுவலகங்களிலும் வாரண்டுகள் ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்படும். (16)

## இந்துமகளிர் உதவி

யாழ் இந்து மகளிர் கல்லூரி இன்ராக்ட் கழக மாணவிகளால் பொதுமக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட பெருமளவு உணவுப் பொருள்கள் அரசடியில் உள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

## ஆண்டு விழா

பேரிஸ்லிவாரின் உதய சூரியன் 27ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நேற்று வியாழன் (24-05-91) மூன்று நாட்களுக்கு விளையாட்டுப் போட்டியும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

வீரவேங்கை நெல்சன், அதா ஆகியோர்களின் ஞாபகார்த்தமாக இவ்விழா நடைபெறுவதாக குறிப்பிடத்தக்கது. (70)

## சார்க் விளையாட்டுப் போட்டிக்கு இருபதுகோடிரூபா செலவிடப்படும்

இலங்கையில் இந்த வருட இறுதியில் நடைபெறவுள்ள தெற்காசிய சம்மேளன விளையாட்டுப் போட்டிகளுக்கு 50 லட்சம் ரூபாவை இலங்கை வங்கி அன்பளிப்பாக வழங்க முன்வந்துள்ளது என இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவ் விளையாட்டுப் போட்டிக்கு 20 கோடி ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 6 கோடி ரூபாவை அரசு வழங்க இணங்கியுள்ளது.

பொது மக்களிடம் இருந்தும் ஆர்வலர்களிடம் இருந்தும் இதுவரை 5 லட்சம் ரூபா வரை அன்பளிப்பாகக் கிடைத்துள்ளது என்றும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். (16)

## இரு தி. மு. க. உறுப்பினர்கள் சென்னையில் அடித்துக் கொலை

ராஜீவ்காந்தி கொல்லப்பட்டதையடுத்து சென்னையில் பரவலாக இடம் பெற்றுவரும் வன்செயலில் பலர் கொல்லப்பட்டுள்ளதோடு பலவாகனங்கள், கட்டிடங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன, தி.மு.க. உறுப்பினர்கள் இருவர் இந்த வன் செயலில் அடித்துக் கொல்லப்பட்டனர்.

## பதவியுயர்வுக்காக எதிரணிகளின் போஸ்டர்களைக் கிழிக்கும் பொலிஸார்

சுதந்திரக் கட்சியின் பொதுக் கூட்ட அறிவிப்புப் போஸ்டர்கள் பொலிஸாரால் கிழித்தெறியப்படுவதாக மைத்திரிபால சேனநாயக்கா எம். பி. குற்றம் சாட்டியுள்ளார்.

பதவியுயர்வினை எதிர்பார்த்து பொலிஸார் பக்கச் சார்பான இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பதவியாவில் இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டி யொன்றில் பொலிஸார் தோல்வியுற்றதை அடுத்து அப்போட்டியை நடத்தியவரும் வெற்றி பெற்றவர்களுமான கிராமத்து இளைஞர்கள் என்பவர் பொலிஸாரால் தாக்கப்பட்டு மதவாச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மைத்திரிபால சேனநாயக்கா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். (16)

## 'ராஜீவ்கொலைக்கு நாமே பொறுப்பு' கலிபோர்ணியாவில் தொலைபேசி அறிவிப்பு

ராஜீவ் கொல்லப்பட்டதற்கு உரிமை கோரி கலிபோர்ணியாவிலுள்ள பத்திரிகை நிறுவனமொன்றுக்கு அநாமதேய தொலைபேசி அழைப்பொன்று கிடைத்துள்ளதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ராஜீவ் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட சிலமணி நேரத்தில் இந்தத் தொலைபேசி அறிவிப்பு அந்தப் பத்திரிகை நிறுவனத்திற்குக் கிடைத்திருக்கிறது.

கலிபோர்ணியாவிலிருந்து இந்தியர்களால் வெளியிடப்படும் இந்தியா வெஸ்ட்" என்ற தினசரிப் பத்திரிகை அலுவலகத்திற்கே இந்த அநாமதேய உரிமை கோரல் அறிவிப்புக் கிடைத்துள்ளது.

## நீங்கள் உடல் பருத்தவர்களா? கெட்டஎண்ணம் உங்களிலில்லை

நம் மத்தியில் குண்டாக இருப்பவர்களை ஒருமாதிரி நினைக்காதீர்கள். அவர்கள் ரொம்ப நல்லவர்களாகவோ நல்ல மனம் படைத்தவர்களாகவோ இருப்பார்கள். சமூக விரோதிகளும், கெட்ட எண்ணம் உடையவர்களும் குண்டாக இருப்பதில்லை என ஓர் ஆய்வு தெரிவிக்கிறது.

## சாதாரண பயிலுநர் ஆசிரியர்களாகப் பணிபுரியும் பட்டதாரிகளுக்கு மார்ச் முதல் பதவி உயர்வு

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் பயிலுநர் ஆசிரியர்களாகப் பணிபுரிவோரில் கணிசமான பட்டதாரிகளும் அடங்குவர்.

இத்தகையோரைக் கடந்த மார்ச்மாதம் 19 ஆம் திகதியில் இருந்து பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் என்ற தகுதிக்கு உயர்த்தி அதற்குரிய சம்பள உயர்வையும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்குக் கிழக்கில் பயிலுநர் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் பட்டதாரிகளுக்குத் தற்பொழுது மாதாந்தம் 1000 ரூபா கொடுப்பனவையே பெற்று வருகின்றனர்.

### அரச அதிபர் மக்கள் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை

# முல்லைத்தீவுப் பகுதி அகதிகளுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடுகள்

முல்லைத்தீவில் இருந்து இடம்பெயர்ந்து வீடுகளிலும் முகாம்களிலும் தங்கியுள்ள மக்களுக்கு, இடம்பெயர்ந்தோர் நிவாரணம் வழங்குவது குறித்து நேற்று முன்தினம் முல்லைத்தீவு மக்கள் பிரதிநிதிகளுக்கும் அரசாங்க அதிபருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் சுமூகமான முடிவு எடுக்கப்பட்டது.

கடந்த 10 மாதங்களாக இவர்களுக்கு எதுவித நிவாரண உணவுப்பொருள்களும் வழங்கப்படாததால் கடந்த 16 ஆம் திகதியில் ஒரு வார முன்னறிவித்தலுடன் மறியல் போராட்டம் நடாத்தவுள்ளதாக இவர்கள் அறிவித்திருந்தனர்.

அரச அதிபருடன் நடாத்திய பேச்சுக்களின் பின் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் வாராந்த நிவாரணம்பெறத்தகுதியுடையவர்கள்:

திங்கட்கிழமையில் இருந்து வாராந்த நிவாரணம் வழங்கப்படும்.

முதல் மூன்று வாரங்களுக்கு உள்ளூரில் உணவுப் பொருள்களை அரசாங்க செயலகம் கொள்வனவு செய்து ப.நோ.கூ. சங்கங்களுக்கு வழங்குதல் மேற்படி பொருள்கள் மூலம் வாராந்த நிவாரணம் வழங்குதல்.

நான்காவது வாரத்தினின்றும் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் பொருள்களை தருவித்து அரசின் கட்டுப்பாட்டு விலைக்கே வழங்குதல் என்பனவே.

அரச அதிபருக்கும் - முல்லைத்தீவு மக்கள் பிரதிநிதிகளுக்கும் பேச்சுவார்த்தை முடிவடைந்த உடனேயே வாராந்த உணவை திங்கள் முதல் வழங்க வேண்டிய உத்தரவுகள் கிராமசேவகர்களுக்கும், ப.நோ.கூ. சங்கங்களுக்கும் நேரில் அழைக்கப்பட்டு அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மக்கள் பிரதிநிதிகள் அரசாங்க அதிபரின் உத்தரவாதங்களை ஏற்று மறியல் போராட்டத்தை கைவிட்டுள்ளதுடன் ஊரடங்குச்சட்டம், கப்பல் வரவின்மை சண்டை நடைபெறுகிறது போன்ற காரணங்களை வைத்து உணவு விநியோகம் தடைப்படுமாயின் நேரடிப் போராட்டத்தில் முன்னறிவித்தலின்றி ஈடுபடவேண்டி ஏற்படும் என்பதையும் அரசாங்க அதிபருக்கு தெரிவித்துள்ளனர்.

## பாலர் பாடசாலை நிறுவ ஆலய நிர்வாக சபை ஏற்பாடு

கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் தெல்லிப்பழை புலோலி புற்றளைச் சித்தி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை பாலர் பாடசாலை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

இப் பாலர் பாடசாலையை ஆரம்பிப்பதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாலர் பராமரிப்பு கல்வி வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படவுள்ள இப் பாலர் வகுப்பு ஆலய மடாலயத்தில் இயங்கவுள்ளது.

இப் பாலர் பாடசாலை ஆசிரியைகளாகப் பணியாற்ற விரும்பும் பயிற்சி பெற்ற பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பாலர் பாடசாலை ஆசிரியைகள் உடனடியாக விண்ணப்பிக்குமாறு மெனவும் ஆலய தருமகர்த்தா சபை அறிவித்துள்ளது. 15

## வீரவேங்கை நினைவாக தும்பளையில் போட்டிகள்

தமிழீழவிடுதலைப்போராட்ட சரித்திரத்தின் முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றான யாழ் கோட்டை இராணுவ முகாம் தாக்குதலில் வீரமரணமடைந்த வடமராட்சி விடுதலை வேங்கையின் நினைவாக தும்பளை இளைஞர்கள் விடுதலைப்புலிகள் கலாசார பிரிவின் ஆதரவுடன் மாபெரும் போட்டிகளை நடாத்தவுள்ளனர்.

ஆவணி மாதம் 4ஆம், 5ஆம் திகதிகளில் தும்பளை கணேசவாசத்தை விளையாட்டு மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளிலே ஆண்கள் பெண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டிகள், கரப்பந்தாட்டம், மரதன் ஓட்டம், அஞ்சல் ஓட்டம், விநோத உடைப்போட்டி, கவிதைப் போட்டி, நாடகப் போட்டி, பேச்சுப் போட்டி, புரட்சிப் பாடல் போட்டி உட்பட இன்னும் பல போட்டிகள் இடம் பெறவுள்ளன.

போட்டிகள் யாவும் வடமராட்சி மட்டத்திலேயே இடம் பெறும் என்றும் போட்டிகளில் பங்கு பற்ற விரும்புபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளலாமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. 15

### 2000ரூபா, 4000ரூபா நிவாரணம்

## விண்ணப்பித்தவர்களுக்கு இன்னமும் வழங்கப்படவில்லை

மீளக்குடியமர்தல் நிவாரணம். 2000 ரூபாவும், உற்பத்தித்திறன் முயற்சிக்கான 4000 ரூபாவும் முதலில் விண்ணப்பித்தவர்களுக்கே வழங்கப்பட்டுள்ளதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

இவற்றைப் பெறாதவர்கள் யாழ்செயலக புனர்வாழ்வுப் பகுதிக்கு விண்ணப்பித்தும் இதுவரை அவர்களுக்கு இவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

முதலில் விண்ணப்பித்தவர் களில் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதால் அவர்களுக்குரிய நிவாரணப் பணமும் இன்னமும் வழங்கப்படாத நிலையில் வங்கிகளில் இருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. ப11

### சத்துணவுத்திட்டம்

களிபுரம் கல்விளான் என்ற கிராமத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பகுதி தொண்டர்களால் நடாத்தப் பட்டு வந்த பாலர் பாடசாலையில் அண்மையில் சிறார்களுக்கான சத்துணவுத் திட்டம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இப் பாலர் பாடசாலையில் சுமார் 30 சிறார்கள் வரை கல்வி பயில்கிறார்கள் இவர்களுக்குத் தினமும் சத்துணவு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 12

## நயினாதீவு கடற்படையினருக்கு யாழ் பத்திரிகைகள் தேவையாம்

நயினாதீவில் உள்ள கடற்படையினருக்கு திடீரென யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் பத்திரிகைகளில் மோகம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

அண்மைக்காலங்களில் நெடுந்தீவு, நயினாதீவு பயணிகள் யாழ்ப்பாணப்பத்திரிகைகளைக் கொண்டு செல்லக் கூடாது என இவர்கள் தடைவிதித்ததுடன், இவற்றைக் கொண்டு சென்ற இலரைத் தாக்கியும் உள்ளனர்

நேற்று நெடுந்தீவிலிருந்து வந்த பயணிகள் நயினாதீவு துறையில் சோதனையிடப்பட்டபோது, மறுமுறை வரும்போது யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளைக் கொண்டுவருமாறு கடற்படையினர் கூறினராம். 78

### ராஜீவின்...

மனைவி சோனியா காந்தி பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் வந்து கொண்டிருந்தனர்.

**ஹெலியில் இருந்து மலர் தூவினர்**

ஊர்வலம் சென்ற பத்து கிலோ மீற்றர் தூரத்துக்கு ராஜீவ் காந்தியின் பேழையை ஏற்றிச்சென்ற பீரங்கி வண்டி மீது ஹெலிகப்டரில் இருந்து ரோஜா இதழ்கள் வீசப்பட்டன

**மெதுவாக நகர்ந்த ஊர்வலம்**

சுமார் ஐம்பதினாயிரம் மக்கள் இவ் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். இதனால் ஏற்பட்ட நெருக்கடியினால் ஊர்வலம் மெதுவாகவே நகர்ந்து செல்ல வேண்டியிருந்தது.

சக்திஸ்தலிற்கு வந்து சேர்ந்த பீரங்கி வண்டியிலிருந்து அமிதாப்பச்சன் உட்பட ராஜீவின் உறவினர்கள் பேழையை எடுத்து சிதைமேல் வைத்தனர்.

**பல உலகதலைவர்கள் கலந்துகொண்டனர்**

ராஜீவ் காந்தியின் இறுதி ஊர்வலத்தில் அறுபது உலக நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர். பாதுகாப்பிற்கென லட்சக்கணக்கான பொலிஸார், இராணுவம் கொமாண்டோப் பிரிவினர் பரவலாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

**ஏழு ஆண்டுகளுக்கு முன்..**

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு இதேயிடத்திலேயே தாயார் இந்திரா காந்தியின் பூதவுடலுக்கு ராஜீவ் காந்தி இறுதிக்கிரியைகளை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ராஜீவ் காந்தியை தகனம் செய்த இடத்தில் அவரின் நினைவுக்தூபி ஒன்றும் எழுப்பப்படவுள்ளது.

### தேர்தலை...

கட்டியே தேர்தலை நடாத்துமாறு கோருவது ஏற்க முடியாது எனவும் ஆணையாளர் தெரிவித்தார்.

தேர்தலை முன்கூட்டியே வைப்பதன் மூலம் காங்கிரஸ் அனுதாப வாக்குகளை பெறலாம் என திட்டமிட்டுள்ளது என சுட்டிக்காட்டப்படுகிறது.

### தமிழ்நாட்டில்...

ஈடுபட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இதே சமயம் பத்துக்கும் மேற்பட்ட பஸ் வண்டிகள் தீக்கிரையாக்கப்பட்டது.

வன்செயல்கள் தொடர்பாக 2700 பேர் தமிழக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

### நெடுந்தீவில்...

தீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பி. அகிலமகி நந்தினி (17) என்ற மாணவி படுகாயமடைந்து யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 78

### மீண்டும்...

ளது. நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே இத்தெரிவு இடம் பெற்றது ஏற்கனவே ஒரு தடவை சோனியா தாம் தலைவராக தெரிவானதை ஏற்க மறுத்துள்ளார் என்பது தெரிந்ததே.

### மூதூரின்...

யிருக்கப்பட்டுள்ளதாக அக்கி வெளி ஆகிய கிராமங்களிலிருந்து வெளியேறி திருகோணமலை இலப்பன் பேர்க் அகதி முகாமுக்கு செல்லுமாறும் படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

பூர்வீகமாகவே இப் பகுதி மக்கள் இங்குவாழ்ந்ததாகவும் தெரியவருகிறது

சிங்களக்குடியேற்றத்துக்காகவே இவர்கள் வெளியேற்றப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### கொழும்பு —

ருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற பயணிகளில் இலர் இலிநொச்சி பகுதிகளில் நிற்பதாகவும் வேறு இலர் யாழ்ப்பாணம் வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ய-11

### மணலாறில்...

தொடர்ந்து காலை 6 மணியளவில் அலம்பில், நாயாறு, கொக்கிளாய் பகுதிகளில் பொம்மர்கள் தாக்குதல் நடாத்தின.

இதனால் நான்கு வீடுகள் வைத்தியசாலை, பாடசாலை கடை என்பன சேதமடைந்தன.

இங்குள்ள உப்பு வெளியிலும் முஸ்லிம்களை வெளியேற்றி சிங்களவர்களைக்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. 88

திருத்தம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளை

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு

**அங்கத்தினர் கூட்டம்**

மேற்படி கூட்டம் 26-05-91 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு கரவெட்டி சின்னத்தம்பி மகா வித்தியாலயம் மாலு சந்தியில் நடைபெறும் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் அனைவரையும் இதில் பங்குபற்றிக் கொள்ளும்படி அழைக்கின்றோம்.

கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி
யாழ்ப்பாணம்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணக் கிளை.

05116

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளை

அமைய எழுதுவினைஞர்கள்

**பதவிக்கு விண்ணப்பம்**

மேற்படி பதவிக்கு க. பொ. த. (சா. த.) இல் (தமிழ், ஆங்கில, கணிதத்தில்) திறமையுடன் சித்தி, தமிழ், ஆங்கிலம் தட்டச்சு, சுருக்கெழுத்தில் சான்றிதழ், கணக்கியலில் அனுபவம், இரண்டு வருடத்துக்குக் குறையாத கந்தோர் நடைமுறை அனுபவம், வயது 20 45 ஆகியவை கொண்டோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி 29-05-1991

நேர்முகப் பரீட்சை 31-05-1991 மு. பகல் 9-00 மணிக்கு இவ் அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியானவர்களின் பெயர்ப்பட்டியல் எமது கந்தோர் விளம்பரப்பலகையில் வெளியிடப்படும்.

தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

கௌரவ செயலாளர்

73, கண்டி றோட்,
யாழ்ப்பாணம்.
24-05-1991

05115

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷேர்ஸ் (பிறைவேட்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி "லஷ்மி"பில்டிங்"கில் உள்ள அச்சகத்தில் 25. 05. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.